தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# வன அருங்காட்சியகத்துக்கு கிடைத்தது சிறப்பு விருது

கோவை, மே 20–

சர்வதேச அருங்காட்சியக தினத்தை முன்னிட்டு, வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் சார்பில் காஸ் வன அருங்காட்சியகத்தில் சிறப்பு விழா நடந்தது.

விழாவில், கோவை இண்டஸ்ட்ரியல் சிட்டி சுழற்சங்கம் சார்பில், இந்தாண்டுக்கான ரோட்டரி சிறப்பு விருது, காஸ் வன அருங்காட்சியகத்துக்கு வழங்கப்பட்டது. கோவை இண்டஸ்ட்ரியல் சிட்டி சுழற்சங்கத்தின் மாவட்ட ஆளுனர் சுந்தர வடிவேலு, விருதை வழங்க வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் இயக்குனர் குன்னிக் கண்ணன் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக விழாவில், விரிவாக்கத் துறை தலைவர் சரவணன் வரவேற்றார். உதவி தலைமை தொழில்நுட்ப அலுவலர் சந்திரசேகரன் வன அருங்காட்சியகத்தின் சிறப்பை விளக்கினார். அருங்காட்சியகத்தை சிறப்பாக நிர்வகித்து வரும் அலுவலர்களுக்கு, சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன. நிறுவன விரிவாக்கத்துறையின் துணை வனப்பாதுகாவலர் மாதவராஜ், வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் விஞ்ஞானி கண்ணன்வாரியார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

26. News in Dinamalar, Coimbatore, 20.05.2022, Gass Forest Museum receives excellence award.